4821
TPH
நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம்
19 AUG 2010
சேப்பாக்கம், சென்னை–5
040690

சுருக்கம்

நிலமெடுப்பு – தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் – தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், வல்லநாடுகஸ்பா கிராமத்தில் புல எண் 291/2 மற்றும் பலவற்றில் 0.83.0 ஹெக்டேர் நிலத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நில எடுப்பு செய்தல் – நிர்வாக ஒப்புதல் வழங்கப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ.3) துறை

அரசாணை (நிலை) எண்.170 நாள்:17.08. 2010

ஆவணி 1, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்கப்பட்டது:

1. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் கடித எண் ந.க.இ2– 311 / 2007, நாள் 22.05.2008
2. முதன்மை செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடித எண் எச்1 / 19611 / 08, நாள் 25.3.2009

.....

ஆணை:

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மை செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர், தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், வல்லநாடுகஸ்பா கிராமத்தில் புல எண் 291/2 மற்றும் பலவற்றில் 0.83.0 ஹெக்டேர் நிலத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நில எடுப்பு செய்ய தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் நிர்வாக ஒப்புதல் கோரியுள்ளதாக குறிப்பிட்டு முன்மொழிவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. முதன்மை செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர், அரசாணை (நிலை) எண் 302, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ.3) துறை, நாள் 25.8.2004–ல் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள புதூர், விளாத்திகுளம், ஒட்டபிடாரம், கயத்தார் மற்றும் கோவில்பட்டி ஒன்றியங்களைச் சேர்ந்த 239 கடலோர/ ஊரக குடியிருப்புகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த விருதுநகர் அருப்புக்கோட்டை நகராட்சிகள், காரியாபட்டி, மல்லாங்கிணறு பேரூராட்சிகள் மற்றும் 67 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

3. மேலும் தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலுவலர் கையகப்படுத்தப்பட உள்ள தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், வல்லநாடுகஸ்பா கிராமத்தில் புல எண் 291/2 மற்றும் பலவற்றில் 0.83.0 ஹெக்டேர் நிலத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நிலமெடுப்பு செய்ய உள்ள நிலத்தினை 16.04.2008 அன்று ஆய்வு செய்துள்ளதாக குறிப்பிட்டு நில எடுப்பிற்குள்ளாகும் நிலத்தின் விவரத்தினை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் :-

..த.பி.பா..

| வ. எண் | புல எண் | வகைபாடு | மொத்த விஸ்தீரணம் | நில எடுப்பு விஸ்தீரணம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 291/2 | நன்செய் | 0.16.5 | 0.04.5 | |
| 2 | 714/பி | நன்செய் | 0.26.5 | 0.05.5 | |
| 3 | 712/4 | நன்செய் | 0.04.0 | 0.01.5 | |
| 4 | 712/5 | நன்செய் | 0.01.5 | 0.01.5 | |
| 5 | 712/2 | நன்செய் | 0.15.5 | 0.01.0 | |
| 6 | 712/3 | நன்செய் | 0.02.0 | 0.02.0 | |
| 7 | 711/2 | நன்செய் | 0.33.0 | 0.03.0 | |
| 8 | 665/1 | நன்செய் | 0.10.5 | 0.03.0 | |
| 9 | 665/[illegible] | நன்செய் | 0.18.5 | 0.03.0 | |
| 10 | 662/3 | நன்செய் | 0.09.5 | 0.01.5 | |
| 11 | 662/2 | நன்செய் | 0.24.5 | 0.04.5 | |
| 12 | 612/2 | நன்செய் | 0.11.5 | 0.01.5 | |
| 13 | 661/1 | நன்செய் | 0.07.0 | 0.02.0 | |
| 14 | 661/2பி | நன்செய் | 0.21.5 | 0.04.5 | |
| 15 | 660/2 | நன்செய் | 0.22.5 | 0.04.5 | நெல் அறுவடை செய்த நிலையில் உள்ளது |
| 16 | 660/1ஏ | நன்செய் | 0.13.5 | 0.03.0 | |
| 17 | 661/2ஏ | நன்செய் | 0.04.5 | 0.02.5 | |
| 18 | 659/2ஏ | நன்செய் | 0.11.5 | 0.03.5 | |
| 19 | 659/1ஏ | நன்செய் | 0.15.0 | 0.04.5 | |
| 20 | 38/1ஏ | நன்செய் | 0.12.0 | 0.03.5 | |
| 21 | 40/1 | நன்செய் | 0.19.0 | 0.03.5 | |
| 22 | 42/1ஏ | நன்செய் | 0.13.0 | 0.02.5 | |
| 23 | 42/1பி | நன்செய் | 0.13.0 | 0.02.5 | |
| 24 | 270/4ஏ | நன்செய் | 0.03.0 | 0.01.0 | |
| 25 | 270/4பி | நன்செய் | 0.03.5 | 0.01.0 | |
| 26 | 270/4சி | நன்செய் | 0.06.5 | 0.02.5 | |
| 27 | 272/2 | நன்செய் | 0.18.5 | 0.04.5 | |
| 28 | 39/2 | நன்செய் | 0.18.0 | 0.04.5 | |
| | | மொத்தம் | | 0.83.0 | |

4. மேலும் இந்நிலங்கள் அனைத்தும் நன்செய் நிலங்கள் என்றும் மேற்படி நிலத்தில் புராதனச் சின்னங்களோ, இறை வழிபாட்டுத்தளங்களோ, மயானமோ, கட்டிடங்களோ ஏதுமில்லை என்றும் உயர்மின் அழுத்த கம்பிகளோ, விலை உயர்ந்த கட்டிடமோ, மரங்களோ ஏதுமில்லையென தூத்துக்குடி கோட்டாட்சித் தலைவரால் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றும் முதன்மை செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

5. மேலும் அவர் பிரஸ்தாப நிலங்களில், நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் பாதிப்பு ஏதுமில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் பிரஸ்தாப நிலங்கள் நகர்ப்புற நிலவரி மற்றும் நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் பாதிப்பு ஏதுமில்லையெனவும், இந்நில ஆர்ஜிதத்தில் கோவில் நிலங்கள் ஏதும் கையகப்படுத்தப்படவில்லை எனவும், இந்நிலங்கள் தாகாஸ்து விதிகளின் படி, நில ஒப்படை ஏதும் செய்யப்படவில்லை எனவும் தூத்துக்குடி கோட்டாட்சித் தலைவர் அறிக்கை அனுப்பியுள்ளதாகவும் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

..த.பி.பா..

6. பிரஸ்தாப நிலங்களுக்கு நில மதிப்பு நிர்ணயம் செய்யும் பொருட்டு, முறப்பநாடு சார்பதிவாளர் அலுவலகத்தில், 1.11.06 முதல் 31.10.07 முடியவுள்ள காலத்தில், நிகழ்ந்துள்ள விற்பனை புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்டதில், மொத்தம் நடைபெற்ற 163 விற்பனைகளில் வரிசை எண் 149ல் கண்ட ஆவண எண் 2841 நாள் 06.09.2007–ன் படி, புல எண் 58–1பி–யில், 0.53 சென்ட் நிலம், ரூ.48,000/–க்கு விற்பனையாகியுள்ளது என்றும், இதையே மாதிரி நிலமாகக் கொள்ளப்பட்டது என்றும், மேலும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் மாதிரி நிலமும் ஸ்தலப் பார்வையிடப்பட்டு உறுதி செய்யப்பட்டது என்றும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் அவர் விற்பனைப்புள்ளி விவரத்தின்படி கையகப்படுத்தப்பட உள்ள 0.83.0 ஹெக்டேர் நிலத்தின் மதிப்பு ரூ.1,85,669/– என்றும் அதன் விற்பனைப்புள்ளி விவரத்தினைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் :

| | |
|---|---|
| இதன்படி 1 ஏக்கர் நிலத்தின் மதிப்பு | 48000 = 90,566/–<br>0.53 |
| எனவே கையகப்படுத்தப்படவுள்ள 0.83.0 ஹெக்டேர் நிலத்தின் மதிப்பு | 0.83.0 x90566 x<br>2.47 =<br>ரூ.1,85,669.35<br>ரூ.1,85,669/– |

புல எண் 58–1பி–யின் வழிகாட்டி மதிப்பு 1 ஹெக்டேருக்கு ரூ.2,26,500/– என உள்ளதால், கையகப்படுத்தப்படவுள்ள 0.83.0 ஹெக்டேர் நிலத்தின் மதிப்பு =.2,26,500 x 0.83.0 = ரூ.1,87,995/– ஆகிறது என்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதாக முதன்மை செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

7. மேலும் தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலுவலர் பிரஸ்தாப நிலமான புல எண் 291/2 மற்றும் பலவற்றில் மொத்த விஸ்தீரணம் 0.83.0 ஹெக்டேர் நிலத்தை 16.04.2008ல், மாவட்ட வருவாய் அலுவலர் புலத்தணிக்கை மேற்கொண்டு மேற்படி பிரஸ்தாப நிலத்தை ஆர்ஜிதம் செய்யவும், மேற்படி மாதிரி நிலமான 58–1பி–யின் கிரைய மதிப்பின் அடிப்படையில் நில மதிப்பு நிர்ணயம் செய்ய (ரூ.1,85,669/–) பரிந்துரை செய்துள்ளதாகவும், மேற்படி நிலங்கள் அனைத்தும் நஞ்சை நிலங்களாகும் என்றும் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்துள்ள முதன்மை செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மேற்படி நிலங்கள் நீர் ஆதாரத்திற்கு அருகில் உள்ளதாலும், இதைத் தவிர வேறு நிலங்கள் அருகில் இல்லாத காரணத்தாலும், மேற்படி நஞ்சை நிலங்களை கையகப்படுத்துவதிலிருந்து தவிர்க்க இயலாது என்றும் தெரிவித்துள்ளார்.

8. தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், வல்லநாடு கிராமம், புல எண் 291/2 மற்றும் சிலவற்றின் பரப்பு 0.83.0 ஹெக்டேர் நஞ்சை நிலங்களை தூத்துக்குடி மாவட்டத்தில் 239 வழியோர மற்றும் கடலோர குடியிருப்புகளில் குடிநீர்த் திட்டத்தின் கீழ் பிரதான நீர் உந்து குழாய் அமைக்க நிலம் கையகப்படுத்த அரசின் ஒப்புதலை கோரியுள்ள தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார். மேலும் முதன்மை செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் குறிப்பிட்டுள்ளவாறு கீழ்க்கண்ட விவரங்களையும் துத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

1. கையகப்படுத்தப்படவுள்ள நிலங்கள் நிலச்சீர்திருத்த சட்டத்தின் கீழ் கவரப்படவில்லை என்பதற்கான நிலச்சீர்திருத்த உதவி ஆணையரது சான்றிதழ் மற்றும்
2. கையகப்படுத்தப்படவுள்ள நிலத்தின் சந்தை மதிப்பு ரூ.1,85,669/– ஆகும். வழிக்காட்டிப் பதிவேட்டின்படியான நிலமதிப்பு ரூ.1,87,995/– ஆகும்.

..த.பி.பா..

9. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், வல்லநாடு கிராமம், புல எண் 291/2 மற்றும் சிலவற்றின் பரப்பு 0.83.0 ஹெக்டேர் நஞ்சை நிலங்களை தூத்துக்குடி மாவட்டத்தில் 239 வழியோர மற்றும் கடலோர குடியிருப்புகளில் குடிநீர்த் திட்டத்தின் கீழ் பிரதான நீர் உந்து குழாய் அமைக்க நிலம் கையகப்படுத்த அரசின் நிர்வாக ஒப்புதலை கோரியுள்ள முதன்மை செயலர் மற்றும் நிலநிர்வாக ஆணையர் செயற்குறிப்பினை ஏற்று நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

10. இவ்வாணை வருவாய் துறை (அ.சா.கு.எண்.24459/ நிநி2/2010-1, நாள் 07.06.2010) மற்றும் நிதி துறை (அ.சா.கு.எண்33494/ந.நி (ம) கு.வ./2010/ நாள் 29.06.2010) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மை செயலாளர்.

பெறுநர்
முதன்மை செயலர் மற்றும் நிலநிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை - 5.
ஊரக வளர்ச்சி இயக்குநர், பனகல் கட்டிடம், சைதாப்பேட்டை, சென்னை - 15.
✓ நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை -5.
மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி.
சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் (ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலமாக)
<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உவியாளர், சென்னை - 9.
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9.
மாண்புமிகு (வருவாய் மற்றும் வீட்டு வசதி துறை அமைச்சர்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை - 9.
வருவாய்த் துறை, சென்னை -9.
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்) துறை, சென்னை - 9.
பொது (நூலகம்) துறை, சென்னை 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ.1/ கு.வ.2/ கு.வ.3/ கு.வ.4/ (அநமு2) வ.செ.) துறை, சென்னை - 9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17.8.2010

பிரிவு அலுவலர்.